கல்லூரிக் கல்வித் துறை

கும்பகோணம், அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)முதல்வர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : முனைவர் க. துரையரசன், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ந.க.எண் : 376/டி/2021 நாள்:28.07.2021

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – அரசினர் கலைக் கல்லூரி(தன்னாட்சி) கும்பகோணம் திருமதி எஸ்.டி.சித்ரா தட்டச்சர் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன் முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை: 1) கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண் : 7882/பி1/2019 நாள்: 28.02.2019 & 10.03.2020 உடன் பெறப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலர் கடித எண்: 1707/PSD-A/2019 நாள்: 20.02.2019.

-----

ஆணை

பார்வை (1) இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை–6 அவர்களின் 28.02.2019 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி –IV இன் கீழ் தேர்வு செய்யப்பட்ட எஸ்.டி. சித்ரா தட்டச்சர் என்பார் இக்கல்லூரியில் தட்டச்சராக 13.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்தார். அன்னார் தனது ஓர் ஆண்டு பணிக்காலத்தில் (பணிவரன் முறை காலத்தில்) தகுதியான தேர்வுகளான (a) மாவட்ட நடைமுறை நூல் தேர்வினை மே–2019 இல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார் [Bulletin No: 18 Date: 16.08.2019 Page No: 3037 ] (b) Computer On Office Automation என்ற தேர்வினை Dec – 2018 இல் எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார்.

பார்வை (1) இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை–6 அவர்களின் 10.03.2020 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-IV தேர்வில் தேர்ச்சி பெற்று தட்டச்சராக பணியேற்றவர்களை பணிவரன் முறை கல்லூரி முதல்வர்களே செய்து விவரம் அனுப்ப தெரிவித்துள்ளார்கள். இதன் அடிப்படையில் இவரது கல்வி தகுதி, தட்டச்சர் சான்று மற்றும் தகுதியான தேர்வுகள் தேர்ச்சி இவைகளை பரிசீலனை செய்து மேலும் கீழ்கண்ட நிபந்தனை (2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018) பணிவரன் முறை தொகுதி-IV சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள தீர்ப்பிற்கு உட்பட்டு கருத்தியலாக அன்னாரை தட்டச்சர் நிலையில் 13.03.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து இதன்வழி ஆணையிடலாகிறது.

(கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆணைப்படி)

28/7/2021

முதல்வர்

முதல்வர்,
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம்.